தரும் பயிர்களைச் செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், அரசாங்கம் தலையிட்டு, அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா? அதைத் தடுக்காமல் இருந்தால் உணவுப் பிரச்சினை மோசமாகும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரசாங்கம் தலையிட்டு, தடுக்கப்பட வேண்டிய அளவுக்கு நிலைமை சீர்கேடு அடையவில்லை.

மேற்கத்திய பாணியில் விடுதி

* 290 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா —

(அ) வெளி நாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவாறு எல்லா நவீன வசதிகளைக்கொண்ட மேற்கத்திய பாணியில் ஓட்டலைக் கட்டுவதற்காக கல்கத்தா மெசர்ஸ் ஓபிராய் ஓட்டல் லிமிடெட் நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு நிலம் கொடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை வருடங்களுக்கு, குத்தகை தொகை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குத்தகைக்காரரிடம் நிலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து இதன் குத்தகைக்காலம் 50 ஆண்டுகள் ஆகும். குத்தகைக்காரர் விரும்பினால் குத்தகைக்காலம் மேலும் 49 ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகை 1,00,350 ரூபாய் ஆகும். இதனை தொகை செலுத்த வேண்டிய ஆண்டில் முந்திய திங்கள் 10-ம் தேதியன்றோ அதற்கு முன்போ செலுத்த வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்போதுள்ள நிலைமை என்ன விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குத்தகை விடப்பட்டாகி விட்டது. பணமும் கட்டியாகிவிட்டது.

முதலாண்டு மருத்துவ மாணவர்கள்

291. வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதலாண்டு மருத்துவ மாணவர்கள் இறுதித் தேர்தலில் தோல்வியுற்றால் கல்லூரியிலேயே சேர்ந்து படிக்க வாய்ப்பைக் கொடுக்கும் உத்தேசம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு

* 292 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. எம். வில்லியம் : } மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டுஏப்ரல் மாதத்தில் வைத்திய பிற்கால மேல் பட்ட படிப்பு நிலையம் (Postgraduate Medical Education and Research Centre) சென்னையில் மத்திய அரசாங்க உதவியுடன் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை அடையாற்றில் மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு—ஆராய்ச்சி நிலையம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் நிறுவுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

Thiru M. WILLIAM : May I know whether any such centre will be opened at Madruai ?

The Hon. Thiru S. J. SADIQ PADSHA : There is no such proposal.

Handloom industry in Tiruttani

*293 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether it is a fact that there is a big slump in handloom goods trade in Tiruttani taluk, Chingleput district ;

(*b*) if so, the steps proposed to be taken to improve the pitiable plight of the handloom weavers in that area ; and

(c) whether there is any propasal to improve the handloom goods trade ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

(உ) கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைத் தவிர, தேவையான இடங்களின் தேவைக்கேற்ற துயர்தணிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகமும், இந்தியக் கைப்பணிகள்-கைத்தறிகள் ஏற்றுமதிக் கார்ப்பிரேஷனும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

Thiru K. VINAYAKAM : Sir, is it not a fact that, when the Hon. Minister for Education visited those areas, he found there a lot of people without the usual work of weaving because of the glut in that trade and what steps are being taken by the Government to give them alternative employment ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகாவைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணித்தேக்கத்தினல், நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும். பொதுவாக எப்போதும் இருந்து வருகிற நிலைமை இருக்கலாமே தவிர புதிதாக எதுவும் ஏற்படவில்லை. அங்கு 12 ஆயிரம் கைத்தறிகள் இருக்கின்றன. ஆயிரம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையின்கீழ் இருக்கின்றன. சென்ற ஆண்டு 11 லட்ச ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தியானது. சென்ற ஆண்டின் விற்பனை 12 லட்சத்திற்கு ஆகியிருக்கிறது. திருத்தணி தாலூகாவைப் பொறுத்தமட்டில் அங்கு உற்பத்தியாகும் துணிகள் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உகந்ததாகவும், உள்நாட்டு மார்க்கெட்டுக்கு உகந்ததாகவும் இருக்கிறது, மெட்ரூஸ் லுங்கி, மெட்ரூஸ் ஹேண்ட் கர்ச்சிப், பாக்கெட் ஹேண்ட் கர்ச்சிப் போன்றவைகள் எல்லாம் கணிசமான அளவுக்கு விற்பனையாகியுள்ளன. நிலைமை மோசமாக இல்லை. பொதுவாக கைத்தறித் துறையில் ஏற்பட்டிருக்கிற மந்த நிலைமை திருத்தணி தாலூகாவில் இருக்கலாமே தவிர, வேறு நிலைமை இல்லை.

சிதம்பரம் வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை

*294 விை.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூக்காவில், கருப்பூர், ஒட்டரைப்பாளையம், முள்ளங்குடி, பருத்திக்குடி, வெள்ளூர் முதலிய பல கிராமங்களில் உள்ள மூங்கில் மரங்களை உபயோகப்படுத்தும் வகையில் அப்பகுதியில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.